පරිපාලන කටයුතු පිළිබඳ පාර්ලිමේන්තු කොමසාරිස් (ඔම්බුඩ්ස්මන්) කාර්යාලය

நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் (ஒம்புட்ஸ்மன்)

OFFICE OF THE PARLIAMENTARY COMMISSIONER FOR ADMINISTRATION (OMBUDSMAN)

වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

Annual Performance Report

2022

වැය ශීර්ෂ අංකය

செலவீன தலைப்பு இலக்கம் **022**

Expenditure Head No

පළමු මහල, අංක-14, ආර්.ඒ.ද මෙල් මාවත, කොළඹ - 04

முதலாவது மாடி, இல -14, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு – 04

1st Floor, No-14, R.A.De Mel Mawatha, Colombo - 04

වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

Annual Performance Report

2022



පරිපාලන කටයුතු පිළිබඳ පාර්ලිමේන්තු කොමසාරිස් (ඔම්බුඩ්ස්මන්) කාර්යාලය

நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் (ஒம்புட்ஸ்மன்)

OFFICE OF THE PARLIAMENTARY COMMISSIONER FOR ADMINISTRATION (OMBUDSMAN)

பொருளடக்கம் **பக்கங்களின் இலக்கம்**

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு **53-65**

1.1 அறிமுகம் 53

1.2.1 தொலைநோக்கு 53

1.2.2 பணி 53

1.2.3 நோக்கங்கள் 54

1.3 பிரதான கடமைகள் 54 - 55

1.4 அலுவலகப் பதவியணியினர்கள் 56

1.5 பெற்றுக்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் பின்பற்றப்படும் நடவடிக்கை முறைகள் 57-65

அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் **66-74**

2. புள்ளிவிபரப் பகுப்பாய்வு **67 - 74**

2.1 புள்ளிவிபரப் பகுப்பாய்வு 67

2.2 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் விதம் 68

2.3 மாதாந்த பகுப்பாய்வு 69

2.4 ஆண்பால் பெண்பால் வகைப்பாடுத்தலின் கீழான பகுப்பாய்வு 70

2.5 மாவட்ட அடிப்படையில் பகுப்பாய்வு 71

2.6 விடய பகுப்பாய்வு 72

2.7 அமைச்சு / அரசாங்க நிறுவனங்களின் பகுப்பாய்வு 73

2.8 கடந்த 10 வருடங்களாக பெறப்பட்ட முறைப்பாடுகளின் பகுப்பாய்வு 74

அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை 76 - 83

அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள் 83

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை 84

அத்தியாயம் 06 - மனித வள விபரம் 84-85

அத்தியாயம் 07- இணக்க அறிக்கை 86-92

8. முடிவுரை 94-95

9. நன்றி தெரிவிப்பு கடிதங்கள் **இணைப்பு**

அத்தியாயம் 01- நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்றுப்பொழிப்பு

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

2022 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை

1.1 அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் 156 ஆவது உறுப்புரையானது நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தை (ஒம்புட்சுமான்) சட்ட பூர்வமாக தாபிப்பதற்கு இடமளித்திருந்தது. பாராளுமன்றமானது 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தை உருவாக்கி அலுவலகத்தை தாபித்து. 1981.03.02 ஆம் திகதியன்று அதன் அதிகாரங்களையும் கடமைகளையும் செயற்பாடுகளையும் விரிவான முறையில் வரையறுத்தது. அதனைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மற்றும் 1994 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டத்தின் மூலமும் 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டம் திருத்தப்பட்டது.

ஒம்புட்சுமான் அலுவலகம் 1981 ஆம் ஆண்டு கொழும்பு 04, காலி வீதி, இலக்கம் 222 என்னும் முகவரியினை கொண்ட கட்டடத்தில் தாபிக்கப்பட்டு அதன் பணிகளை ஆரம்பித்தது. அதன் பின்னர் இவ்வலுவலகம் கொழும்பு 03, காலி வீதி, இலக்கம் 594/3 என்னும் முகவரியினை கொண்ட கட்டடத்திற்கு இடமாற்றப்பட்டு 1989 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை தனது பணிகளை நிறைவேற்றியது. அதன்பின்னர் கொழும்பு 05, எளிபாங் வீதி, இலக்கம் 06 என்னும் இடத்திற்கு இடமாற்றப்பட்டு 2006 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை அவ்விடத்தில் செயல்பட்டு வந்தது. தற்போது ஒம்புட்சுமான் அலுவலகம் கொழும்பு 04, ஆர்.ஏ.டிமெல் மாவத்தையில் இலக்கம் 14 என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

1.2.1 தொலைநோக்கு

அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அதனையொத்த ஏனைய நிறுவனங்கள் என்பவற்றில் சேவையாற்றும் அலுவலர்களால் இழைக்கப்பட்ட நிர்வாக அநீதிகளை ஒழிக்கும் பொருட்டு விசேடமாக நடுநிலமை, வெளிப்படைத் தன்மை என்பன ஒருங்கமைந்தவாறான பாதுகாப்பானதும், நீதியானதும் மற்றும் நேர்மையானதும் ஆன தீர்மானங்களை வழங்குவதனூடாக சிறந்த மக்கள் சேவையை உறுதிப்படுத்துவதற்கு சகல முயற்சிகளையும் எடுப்பதே எமது தொலைநோக்கமாகும்.

1.2.2 பணி

அரசாங்க நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், நியதிச் சட்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் பகுதியளவிலான அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றில் பணிபுரியும் அலுவலர்களால் எடுக்கப்படும் தவறான நிர்வாக தீர்மானங்களால் ஏற்படும் மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்ட முறைப்பாடுகளை பக்கசார்பின்றி புலனாய்வு செய்து அதன்பின்னர் அம்மீறல்களுக்கு பரிகாரமாக ஏற்புடையதான கட்டளைகள், தீர்மானங்கள், ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை வழங்குதல் ஆகும். நிர்வாக அநீதிகள் மற்றும் இலங்கை குடியரசின் அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல்கள் என்பன உள்ளடங்கலாக வேறுவகையான ஏனைய அநீதிகளும் மேலே கூறப்பட்ட மீறல்களுள் உள்ளடங்குவன ஆகும்.

1.2.3. நோக்கங்கள்

அரசாங்கம், உள்ளூராட்சி மன்றங்கள், நியதிசட்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் பகுதியளவிலான அரசாங்க நிறுவனங்கள் எள்பவற்றில் பணிபுரியும் அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் தவறான நிர்வாக தீர்மானங்களினால் பொதுமக்களுக்கு ஏற்படும் அநீதியை சீர்திருத்தி, அரசாங்க நிர்வாகத்தை திறமையாகவும் பயனுறுதிவாய்ந்ததாகவும் நடாத்திசெல்வதற்கு ஏதுவான அரச பொறிமுறைக்கு உதவி, அத்துடன் தீர்மானங்களை நிறைவேற்றும் போது அவற்றை சரியாகவும் திறமையாகவும் அமுல்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுப்பதே எமது பிரதான நோக்கமாகும்.

1.3 பிரதான கடமைகள்

பாராளுமன்றமானது, நிருவாத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமான்) அலுவலகத்தை தாபித்தல் வேண்டும் என இலங்கை குடியரசின் அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரை குறித்துரைக்கிறது. அரசாங்க அலுவலர்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள். உள்ளூராட்சி அதிகாரசபை மற்றும் அதேபோன்ற ஏனைய நிறுவனங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் தமது கடமைகளை நிறைவேற்றும் போது அவர்களால் மீறப்படும் அடிப்படை உரிமைகள் மீறல் அல்லது ஏனைய அநீதிகள் தொடர்பிலான முறைப்பாடுகளை அல்லது சார்த்துரைகளை புலனாய்வு செய்து அறிக்கையிட்டு அவ்வகையான மீறல்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவற்றுக்கு பரிகாரங்களை வழங்குதல் மற்றும்/அல்லது பொருத்தமான பரிந்துரைகளை வழங்குதல் என்பன இப்பதவிக்குரிய கடமைகளாகவுள்ளன.

அதற்கமைய 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிர்வாத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டம் உருவாக்கப்பட்டு ஒம்புட்சுமான் அலுவலகம் தாபிக்கப்பட்டது. அச்சட்டத்தில் ஒம்புட்சுமானின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் விபரிக்கப்பட்டு, வரையறுக்கப்படுள்ளன. அதனைத் தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து அடிப்படை உரிமைகள் மீறல்கள் அல்லது ஏனைய அநீதிகள் தொடர்பான முறைப்பாடுகளை நேரடியாக ஒம்புட்சுமானிடம் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதாக 1994 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மேலே கூறப்பட்ட சட்டம் திருத்தப்பட்டது.

மனித உரிமை மீறல்கள், அநீதிகள், அநியாயங்கள் என்பவற்றைப் புலனாய்வு செய்வதற்கும் விசாரணை செய்வதற்கும் அத்துடன் முறையீட்டுக்கு உள்ளான அரசாங்க அலுவலரின் தீர்மானம், பரிந்துரை, செயற்பாடு அல்லது தவிர்ப்பு சட்டத்திற்கு எதிரானதா, அநீதியானதா, அடக்கு முறையானதா அல்லது பாகுபாடானதா அல்லது முறையற்ற தற்றுணிவு பிரயோகமா என தீர்மானிப்பதற்கு ஒம்புட்சுமான் பணிக்கப்படுகிறார். அரசாங்க அலுவலரொருவரால் ஒரு நபரின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது என அல்லது அத்தகைய அலுவலரினால் அநீதி ஏற்பட்டுள்ளது என புலனாய்வின் பின்னர் ஒம்புட்சுமான் திருப்தியடையுமிடத்து, அவர் தீர்மானம் எடுத்து அதற்கமைய நிவாரணம் வழங்குவார். ஒம்புட்சுமான் பாதிக்கப்பட்ட நபருக்கு நிவாரணம் வழங்கும் வகையில் சம்பந்தப்பட்ட அரசாங்க அலுவலரின் செயற்பாட்டை மீள்பரிசீலனை செய்வதற்கும், சீர்படுத்துவதற்கும், இரத்துசெய்வதற்கும் அல்லது மாற்றுவதற்கும் பரிந்துரை வழங்கலாம். அத்துடன் அரசாங்க அலுவலர் சார்பாக நிறுவன தலைவரிடம் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பரிந்துரை அமுலுக்கு வரும்வகையில் அவரினால் முன்மொழியப்படும் படிமுறைகளை அறிவிக்குமாறு கோரலாம்.

இறுதியாக, அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பளித்தல், அரசாங்க மற்றும் அதையொத்த ஏனைய நிறுவனங்களில் உள்ள அலுவலர்களின் செயற்பாடுகள் மூலம் ஏற்படும் ஏனைய அநீதிகளிலிருந்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பன ஒம்புட்சுமானின் உயர்ந்த கடமையாக உள்ளது என்பது தெளிவாகிறது. மக்களுடைய உரிமைகளை பாதுகாக்கும் அதேவேளை அரசியலமைப்பின் உறுப்புரைகளில் மற்றும் சட்டவாக்கத்தை சட்டமாக்கும் ஏற்பாடுகள் மற்றும் அதனுடைய ஒழுங்கு விதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளினால் வெளியிடப்படும் பல்வேறுவகையான சுற்றறிக்கைகளில் உள்ளடக்கிய விதிகள் தொடர்பான விடயங்கள் சார்பாகவும் அரசாங்கத்தின் நிர்வாக கொள்கை முறையாக அமுல்படுத்தப்படுகிறதா என உறுதிப்படுத்தல் ஒம்புட்சுமானின் கடமையாகும்.

முறைப்பாடுகள் பெற்றுக்கொண்ட பின்னர் பின்பற்றப்படும் நடைமுறைகளின் பல்வேறு வகையான நிலைகள்

Parliamentary Commissioner for Administration
(OMBUDSMAN)

පරිපාලන කටයුතු පිළිබඳ පාර්ලිමේන්තු කොමසාරිස් (ඔම්බුඩ්ස්මන්) කාර්යාලය
நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்
(ஒம்புட்ஸ்மன்)
OFFICE OF THE PARLIAMENTARY COMMISSIONER FOR ADMINISTRATION (OMBUDSMAN)

முறைப்பாடுகள் / மனுகள்

- பதிவு தபால் மூலம்
- சாதாரண தபால் மூலம்
- மின் அஞ்சல் மூலம்
- நேரடியாக கையளித்தல்



நிர்வாக அலுவலர்

நாளாந்தம் கடிதங்கள் பிரிக்கப்பட்டு, முறைப்பாடுகளுக்கு திகதி முத்திரையிடப்படுகிறது.

பிரதான முகாமை சேவை அலுவலர்

- பெறப்படுகின்ற முறைப்பாடுகளின் விடயங்களை முறைப்பாட்டு பதிவேட்டில் பதிதல்.
- விடய வகைப்படுத்தலுக்கு அமைய ஏற்புடைய அலுவலருக்கு முறைப்பாட்டை ஒதுக்கல்

விடய முகாமை அலுவலர்

- முறைப்பாடுகளை பெற்றுக்கொண்ட சம்பந்தப்பட்ட அலுவலர்களால் கோவைகள் தயாரிக்கப்படுகின்றன.
- கோவை தயாரிக்கப்பட்டவுடன் விடய எழுதுநர் ஒம்புட்சுமானிடம் கலந்துரையாடி ஆலோசனை மற்றும் அறிவுறுத்தலை பெற்றுக்கொள்வதுடன் அதன் பிறகு மேற்கொள்ளவேண்டிய அவசியமான நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்பித்தல்.

நிர்வாக அலுவலர்


நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமான்)

- பெற்றுக்கொள்ளப்படுகின்ற சகல முறைப்பாடுகள் தொடர்பில் ஒம்புட்சுமானிடமிருந்து அறிவுறுத்தலை பெற்றுக்கொள்ளுதல்.
- நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு அனுப்பப்படும் முறைப்பாடுகளில் / மனுக்களில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் அதிகார எல்லையினுள் உள்ளடங்குகின்றதா என ஒம்புட்சுமான் மிகவும் கவனமாக ஆராய்வார். அவ்வாறு அச்சட்டத்தின் அதிகார எல்லையினுள் உள்ளடங்காத முறைப்பாடுகள், நிராகரிக்கப்படுவதற்கான காரணங்கள் குறிப்பிட்டு நிராகரிக்கப்படும்.
- முறைப்பாட்டில் போதுமான தகவல்களை வழங்காதவிடத்து ஒம்புட்சுமானின் வழிகாட்டலின் கீழ் முறைப்பாட்டாளரிடமிருந்து தேவையான தகவல்கள் பெறப்படும் (ஓஎம்பி படிவம் -1 ஐ அனுப்புவதன் மூலம்)
- நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்ட அதிகார எல்லையினுள் உள்ளடங்குகின்ற முறைப்பாடுகள் பதியப்பட்டு முறைப்பாடு தொடர்பில் விரிவான அறிக்கையொன்றை அனுப்புமாறு பிரதிவாதியாக உள்ள அலுவலருக்கு அனுப்புவதுடன் அதன் பிரதியொன்று முறைப்பாட்டாளருக்கு அனுப்பப்படும்.
- பெறப்படும் அறிக்கைக்கு அமைய, முறைப்பாட்டுக்கு நிவாரணம் வழங்க கூடிய சாத்தியம் காணப்படுமாயின் அத்தகைய நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

1.4 அலுவலகப் பதவியணியினர்கள்

இவ்வலுவலகம் 32 பதவியணியினர்களை அங்கீகரித்துள்ளது. ஆயினும் நிறுவன அமைப்பு வரைபடம் காட்டுவது போல் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இவ்வலுவலகத்தில் 20 அலுவலர்கள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளனர். இவ்வலுவலகத்தில் பதவியணியினர் பற்றாக்குறையால் பணி செயற்பாடுகள் தாமதமடைவது அவதானிக்கப்படுகிறது. (வரைபடத்தை பார்க்கவும்)

நிறுவன அமைப்பு வரைபடம்



1.5 பெற்றுக்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் பின்பற்றப்படும் நடவடிக்கை முறைகள்

இவ்வலுவலகத்தால் பெறப்படும் ஒவ்வொரு முறைப்பாடும் ஓர் தனி பதிவேட்டில் பதியப்படுகிறது. ஒவ்வொரு முறைப்பாட்டுக்கும் விசேட இலக்கம் வழங்கப்படுகிறது. அதன் பின்னர் முறைப்பாடுகள் ஓய்வூதியம், விதவைகள் அநாதைகள், சம்பள முரண்பாடுகள், சம்பள உயர்வுகள், பதவி உயர்வுகள், காணி, அதிகாரமளிக்கப்படாத நிர்மாணங்கள் ,சேவை முடிவுறுத்தல், பதவியில் மீளஅமர்த்தல், பல்கலைக்கழக / பாடசாலை அனுமதி, அதிகார துஷ்பிரயோகம் என்பன போன்ற விடயங்களுக்கு அமைய வகுக்கப்படுகின்றன. அவை குறிப்பிட்ட விடயங்களாக ஒதுக்கப்பட்டு இவ்வலுவலகத்தின் அலுவலர்களால் நிர்வாகிக்கப்படுகிறன. அவ்வலுவலர்கள் அரசாங்கசேவையின் "முகாமை சேவை அலுவலர்" வகுதியினரை சேர்ந்தவர்களாகும். முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டதும் அம்முறைபாடு ஏற்புடைய முகாமை சேவை அலுவலருக்கு (விடய எழுதுநர்) அனுப்பப்படும். அதன்பின்னர் அவர்கள் ஒவ்வொரு முறைப்பாட்டுக்கும் ஒரு கோவையை திறப்பார்கள். விடய தலைப்பு தெரிவானது அலுவலகத்தின் பிரதம முகாமை சேவை அலுவலரால் மேற்கொள்ளப்படுகிறது.

குறிப்பிட்ட முறைபாடு தொடர்பில் கோவை திறக்கப்பட்டதும் முறைபாட்டில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை எழுதுநர் சுருக்கமாக குறிப்பு எழுதுவார். அதன்பின்னர் அவர் நிர்வாக அலுவலருடன் முறைப்பாடு தொடர்பான தன்மையை விவாதிப்பார் பின்னர் இருவரும் ஒம்புட்சுமானை சந்தித்து முறைப்பாடு தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை தொடர்பாக அவருடைய ஆலோசனையையும் உதவியையும் பெற்றுக்கொள்வார்கள்.

மிகவும் முக்கியமான கலந்துரையாடல் ஒன்று நடைபெறும். அக்கலந்துரையாடலில் இணைக்கப்பட்ட ஏனைய ஆவணங்களுடன் பெறப்பட்ட முறைப்பாட்டில் உள்ளடக்கப்பட்ட விடயத்தை ஒம்புட்சுமான் கவனமாக ஆராய்வார். மிகவும் முக்கியமான விடயமாக முறைபாடு / சார்த்துதல் ஒம்புட்சுமானின் நியாயாதிக்கத்திற்குள் அமைந்துள்ளதா என உறுதிப்படுத்துவதன் பொருட்டு ஆராயப்படும். இப்பிரச்சனை பற்றி தீர்மானிக்கும் போது நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் (இதன்பின்னர் சட்டம் என குறித்துரைக்கப்படும்) பிரிவுகள் 10, 11, மற்றும் 17 இல் காணப்படும் விடயங்களை ஒம்புட்சுமான் கவனத்தில் கொள்வார். இம்முறைப்பாடு சட்டத்தின் எல்லைக்குள் இல்லாவிட்டால் இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாமைக்கான காரணங்களை உள்ளடக்கி முறைபாட்டாளருக்கு உடனடியாக தெரியப்படுத்தப்படும்.

இம்மனு தொடர்பாக நடவடிக்கை தொடர்வதற்கு ஒம்புட்சுமான் தீர்மானிக்கும் போது ஒவ்வொரு முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய படிமுறைகள் சார்பாக பொருத்தமான ஒழுங்குகளை மேற்கொள்ளுவார். முறைப்பாட்டாளரினால் கோரப்படும் நிவாரணம் மற்றும் யாருக்கு எதிராக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது போன்ற மேலதிக தகவல்களை பெறுவது அவசியம் என ஒம்புட்சுமான் கருதுவாரானால், அவ்வகையான தகவல் மனுதாரரிடமிருந்து கோரப்படும். அதன்பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தாமதமின்றி இவ்வழக்கை முடிவுறுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது எனினும் இம்முயற்சி முறைப்பாட்டின் இயல்பில் தங்கியுள்ளது.

பொதுவாக இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டதும் எவ்வலுவலர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதோ அவ் அலுவலர்களை விட உயர் பதவியில் உள்ள அலுவலர்களிடமிருந்து கருத்தறிவிப்பு கோரப்படுகிறது. கருத்தறிவிப்பு அனுப்பப்பட்டதும் அதற்கு அவ்வதிகாரிகள் நிவாரணம் வழங்குவதற்கு தீர்மானித்துள்ள சந்தர்ப்பங்களும் உண்டு. மாறாக சில சந்தர்ப்பங்களில் கருத்தறிவிப்பை பெற்றுக்கொள்வதற்கு பல நினைவூட்டல் கடிதங்கள்

அனுப்பவேண்டியிருந்தது. சில சந்தர்ப்பங்களில் ஒம்புட்சுமான் பல நினைவூட்டல் கடிதங்களை அனுப்பியதன் பின்னரே சுமாரான எண்ணிக்கையிலான முறைப்பாடுகளுக்கு அர்த்தமுள்ள விளைவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சிலவேளை சாதாரண நடைமுறைகளூடாக ஒம்புட்சுமானால் நியாயமான தீர்மானத்தை எட்ட முடியாதுள்ள சந்தர்ப்பத்தில் குழுக்கள் இவ்வலுவலகத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படுகிறார்கள்.

ஒவ்வொரு குழுக்களும் தமது வாதங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கி இயற்கை நீதியின் விதிகளை அவதானித்து விசாரணை நடாத்தப்படுகிறது. அடிப்படை உரிமை மீறல் அல்லது அநீதி ஏற்பட்டுள்ளது என நிரூபிக்கும் போதெல்லாம், ஒம்புட்சுமான் பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் வழங்குவதற்கு முயற்சி செய்வார். அந்நடவடிக்கையின் மூலம் நியாயமான தீர்மானமொன்றை நிறைவேற்ற தவறும் பட்சத்தில் அவ்விடயம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும். ஒம்புட்சுமான் தனது சகல முயற்சிகளிலும் தீர்வு காண முடியாதுபோனால், அவர் அப்பிரச்சனை தொடர்பில் தீர்மானமொன்றை மேற்கொண்டு குறித்த காலப்பகுதிக்குள் அத்தீர்மானத்தை அமுல்படுத்துமாறு பிரதிவாதிக்கு அறிவிப்பார்.

அக்குறித்த காலத்தினுள் எந்நடவடிக்கையும் மேற்கொள்ளாவிடின் ஒம்புட்சுமான் தனது அறிக்கையின் பிரதியொன்றை சனாதிபதிக்கு அனுப்புவதுடன் பாராளுமன்றத்திற்கும் பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு அனுப்பப்படும். ஒம்புட்சுமான் அலுவலகம் இதன்முன்னர் குறித்துரைத்த செயற்பாட்டை பின்பற்றுவதில் உறுதி கொண்டுள்ளது.

மேலே கூறப்பட்ட முறையில் மனுக்கள் தொடர்பிலான நடைமுறைகளை மேற்கொண்டு அதன்பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஒம்புட்சுமானின் தலையீட்டை நாடிய விண்ணப்பதார்களுக்கான நிவாரணங்கள் இவ்வலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது தொடர்பில் வேறுபட்ட பகுதிகளை உள்ளடக்கிய சில விடயங்களை தற்போது குறித்துரைப்பதன் மூலம் இவ்வலுவலகத்திற்கு முன்வைக்கப்படும் மனுக்களின் சரியான இயல்பு மற்றும் வகைகள் தொடர்பிலான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

கோவை இலக்கம் : OMB/2/2/1/492/0021 **பெயர் : திரு. கே.ஜி.பி. சத்துரங்க கமகே**

பொலநறுவை மாவட்டத்தின் தமன்கடுவை பிரதேச செயலக பிரிவின் இலக்கம் 261/1 சிங்கபுரம், விஜயபாகுபுரம் எனும் முகவரியில் வசிக்கும் திரு. கே. ஜி. பி. சத்துரங்க கமகே அவர்களால் 2021.11.29 ஆம் திகதி எமக்கு அனுப்பப்பட்டிருந்த முறைப்பாடு ஒன்றில், அவரது வயலுக்குள் நுழைவதற்காக அரச காணி ஒன்றின் ஊடாக நுழைவுப் பாதையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், அந்த அரச காணியைப் பயன்படுத்துபவர்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட காரணத்தால், அவரது காணிக்கான நுழைவுப் பாதையை அமைக்க முடியாது போயிருந்தது எனத் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய இது தொடர்பாக 2022.01.06 ஆம் திகதி தமன்கடுவை பிரதேச செயலகத்திடமிருந்து அறிக்கை ஒன்று கோரப்பட்டு இருந்தது. 2022.01.26 ஆம் திகதி பிரதேச செயலாளரினால் எமக்கு அறிக்கையொன்று அனுப்பப்பட்டு இருந்ததுடன் அதில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளுக்கு அமைய, பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு ஏற்ப, முறைப்பாட்டாளரின் காணி அளவீடு குறைபாடுகளைக் கொண்டுள்ளது எனவும் அது தவறான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கமைய குடியிருப்பு உத்தியோகத்தர்களினால் களப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் முறைப்பாட்டாளர் மற்றும் ஆரியரத்ன என்பவரின் காணிக்கான நுழைவுப் பாதைகள் இல்லை என்பதும் நுழைவுப் பாதையை கால்வாய் அணையில் பெற்றுக் கொடுக்க முடியும் என்பதும் அறிக்கையிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாகப் பிரதேச செயலாளரினால் இரு தரப்பினரையும் அழைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் திரு. கே. ஜி. பி. சத்துரங்க கமகே அவர்களுக்கு நுழைவுப் பாதையை ஒதுக்குவதற்கு ஆரியரத்ன என்பவரின் இணக்கப்பாடும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய திரு. கே. ஜி. பி. சத்துரங்க கமகே அவர்களினால் 2022.02.08 ஆம் திகதி எமக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் எமது தலையீட்டினால் அவரது சிக்கல் தீர்க்கப்பட்டுள்ளது எனவும், அதற்காக நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

கோவை இலக்கம் : OMB/P/2/1/478/2021 **பெயர் : திரு. டபிள்யு. எஸ். டி. த சில்வா**

கம்பஹா மாவட்டத்தின் பியகம பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 370 மானெல்வத்த வீதி, பொல்லேகல கோணவில எனும் முகவரியில் வசிக்கும் திரு. டபிள்யு. எஸ். டி. த சில்வா அவர்களினால் 2021.10.21 ஆம் திகதியிடப்பட்டு எமக்கு அனுப்பப்பட்ட முறைப்பாட்டில் , இலங்கை காணி நில மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன பொதுமுகாமையாளரின் இலக்கம் LM/8986 கொண்டதும் 2019.03.07 ஆம் திகதி இடப்பட்டதுமான கடிதத்தின் மூலம் அவருக்கு உரியதான சமர்ப்பிக்கப்பட்டிருந்த அனைத்து நிபந்தனைகளையும் திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது என தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த காரணிகளைக் கருத்தில் கொள்ளாது நில அளவையாளர் திட்டத்தினை அனுமதிக்காது நிராகரித்திருந்தார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த காரணிக்கு உரிய விண்ணப்பதாரியான திரு. டபிள்யு. எஸ். டி. த சில்வா அவர்களினால் 2021.10.21 ஆம் திகதி இடப்பட்டு இந்த அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளை ஆராய்ந்ததன் பின்னர், அது தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கடுவெல நகர சபையின் நகர ஆணையாளருக்கு 2021.11.03 ஆம் திகதி கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த கடிதத்திற்கான பதிலாக நகர ஆணையாளரினால் இலக்கம் KBP173/15 கொண்டதும் 2021.12.08 ஆம் திகதியிடப்பட்ட அறிக்கை அனுப்பப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள காரணிகள் தொடர்பில் விண்ணப்பதாரியினால் அவரது கருத்துக்கள் மீளவும் எமக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்தக் காரணிகள் தொடர்பில் கவனத்தினைச் செலுத்தி மீண்டும் அந்த காரணிகளுக்கு உரிய, அறிக்கையொன்றினை அனுப்புமாறு கடுவெல நகர சபை நகர ஆணையாளருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிவிப்புக்கு அமைய, கடுவெல நகர சபையின் நகர செயலாளரினால் (பதில் கடமை) இரண்டாவது தடவையாகவும் இலக்கம் KBP173/15 கொண்டதும் 2022.05.06 ஆம் திகதி இடப்பட்டதுமான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறாக, இந்த காரணி தொடர்பில் தெளிவான தீர்மானத்திற்கு வர முடியாத காரணத்தினால், தரப்பினர்களின் பங்கேற்புடன் பரீட்சிப்பினை மேற்கொள்ளுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய 2022.06.17 ஆம் திகதி விண்ணப்பதாரரி மற்றும் கடுவெல நகர சபை நகர பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், மாவட்ட உத்தியோகத்தர் ஆகியோரின் பங்கேற்புடன் கூடிய பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டது.
பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்டதாவது, முறைபாட்டாளரின் வேண்டுகோளானது சட்டத்திற்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், அவரது வேண்டுகோளின் படி அனுமதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் 2806A கொண்ட நில அளவைப் படத்திற்கு விதிக்கப்பட்டுள்ள ஆறு நிபந்தனைகளில் இரண்டாவது நிபந்தனையான,

“இந்தக் காணி வியாபார நோக்கத்தின் கீழ் மீண்டும் உட்பிரிவு அல்லது காணியினை அபிவிருத்தி செய்வதாயின் இலங்கை நில மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பரிந்துரைக்கு அமைய திட்டத்தில் உள்ள நீர் மூலாதாரம் வரையில் தொடர்பு படுத்துவதற்கு உள்ள முழுமையான கால்வாய் அமைப்பு விண்ணப்பதாரினால் அபிவிருத்தி செய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.”

என்பதனை நீக்கி, நில அளவைப்பட அனுமதி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது நிபந்தனையை நீக்குமாறு ஆகும். அதற்கு அமைய நகர ஆணையாளரினால் பாராளுமன்ற ஆணையாளருக்கு வழங்கியுள்ள பரிந்துரை அமுல்படுத்தப்பட்டுள்ளது எனவும், 2022.09.13 ஆம் திகதி இடப்பட்ட கடிதத்தில் கடுவெல நகர ஆணையாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நில அளவைத் திட்ட இலக்கம் 2806A இற்கு 2019 ஆம் ஆண்டில் திட்டமிடல் குழுவின் மூலம் பயன்படுத்தப்பட்ட நிபந்தனை இலக்கம் 02 ஐ நீக்குதலானது, 2022 இல் செய்யப்பட்ட முறைப்பாட்டிக்கு அமைய எமது நிறுவனத்தின் தலையீட்டின் அடிப்படையில் நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருந்தது என முறைப்பாட்டாளரினால் 2022.09.15 ஆம் திகதியிடப்பட்ட நன்றிக் கடிதத்தின் மூலம் எமக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கோவை இலக்கம் : OMB/P/2/2/3695/2021 **பெயர் : திரு. டபிள்யூ. டி. ரஞ்சித் விஜேமான்ன**

பொலநறுவை மாவட்டத்தின் மெதிரிகிரிய பிரதேச செயலக பிரிவில் இலக்கம் 06, நிலப்பரப்பு 06, நவ நகரம், மெதிரிகிரிய எனும் முகவரியில் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டிருந்த திரு. டபிள்யூ. டி. ரஞ்சித் விஜேமான்ன அவர்களுக்கு கவுடுளுவெவ கட்டம் II, நிலப்பரப்பு 04, இலக்கம் 78 கொண்ட சேற்றுக் காணிக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த அனுமதிப் பத்திரத்தில் பின்னைய உரிமைத்துவத்திற்கு அவரது மகளை நியமிப்பதற்கு உரிய ஆவணங்களுடன் அந்த சேற்று நிலத்திற்கு உரிய அனுமதிப் பத்திரம் குடியிருப்பு உத்தியோகத்தரிடம்

கையளிக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த ஆவணங்கள் காணாமல் போயுள்ளதாகக் குடியிருப்பு உத்தியோகத்தரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பின்னர் அந்த குடியிருப்பு உத்தியோகத்தர் ஓய்வு பெற்று சென்றுள்ளதால் குறித்த பின்னைய உரிமைத்துவத்தினைப் பெயரிடுதல் மேற்கொள்ளப்பட்டிருக்காததால் டபிள்யூ. டி. ரஞ்சித் விஜேமான்ன அவர்களின் உரிமையை உறுதிப்படுத்தி பின்னைய உரிமைத்துவத்தைத் தமது மகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இவ்விடயத்தில் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திரு. டபிள்யூ. டி. ரஞ்சித் விஜேமான்ன அவர்களினால் 2021.03.03 ஆம் திகதி கோரப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடு தொடர்பில் 2021.03.19 ஆம் திகதி மெதிரிகிரிய பிரதேச செயலாளரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டிருந்தது. எமது தலையீட்டின் அடிப்படையில் அது வரையில் நிறைவேற்றப்பட்டிருக்காத முறைப்பாட்டாளரின் கோரிக்கையான உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி பத்திரத்தின் பிரதி ஒன்று வழங்கப்பட்டு அந்த காணிக்கு அவரது பிள்ளைக்கு பின்னைய உரிமைத்துவம் பெயரிடப்பட்டுள்ளது எனவும் அந்த அனுமதி பத்திரத்திற்கான கொடுப்பனவு பத்திரத்தைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் மெதிரிகிரிய பிரதேச செயலாளரினால் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

அதன் பின்னர், முறைப்பாட்டாளரான திரு. டபிள்யூ. டி. ரஞ்சித் விஜேமான்ன அவர்களினால் 2021.12.27 ஆம் திகதியிடப்பட்டு எமது நிறுவனத்திற்கு அனுப்பி இருந்த கடிதத்தின் மூலம், இந்த சிக்கலைத் தீர்ப்பதற்கு நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் உள்ளிட்ட பதவி அணியினரும் காட்டிய ஒத்துழைப்பிற்கு அவரது மனமார்ந்த கௌரவத்தையும் நன்றியையும் தெரிவிப்பதாகக் கூறியிருந்தார்.

கோவை இலக்கம் : OMB/P/2/4/5339 **பெயர் : திரு. எம்.கே. தர்மசிரி**

திரு. எம். கே. தர்மசிரி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டில், 2022 ஆம் ஆண்டில் இரத்தினபுரி பர்கஸன் வித்தியாலயத்தில் தரம் 01 இற்கு தனது மகளை அனுமதிப்பதற்காக கல்வி அமைச்சு பதவி அணித் தொகுதியின் கீழ் விண்ணப்பித்திருந்ததாகத் தெரிவித்திருந்தார். அதற்குரிய நேர்முகப் பரீட்சையின் போது சேவை நிலையத்திலிருந்து பாடசாலைக்கு உள்ள தூர அளவுக் கணக்கீட்டினைப் பிழையானதாக மேற்கொண்டு, அதற்காக கிடைக்க வேண்டிய 05 புள்ளிகளைப் பெற்றுக் கொடுக்காது தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது எனவும், அதற்கு அமைய பிள்ளையைப் பாடசாலையில் அனுமதிக்க முடியாது போயுள்ளது எனவும் விண்ணப்பதாரியினால் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இது தொடர்பில் இர/ பர்கஸன் வித்தியாலய அதிபரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டிருந்தது. அவ்வாறு அறிக்கை கோரப்பட்டு எம்மால் மேற்கொள்ளப்பட்ட தலையீட்டின் பின்னர் குறித்த பாடசாலையின் மேல்முறையீட்டுக் குழு மற்றும் நேர்முகப் பரீட்சைக் குழு என்பன கலந்துரையாடிய பின்னர் விண்ணப்பதாரரின் பிள்ளையைப் பாடசாலையில் அனுமதிப்பதாக தீர்மானிக்கப்பட்டு 2022.04.05 ஆம் திகதி பிள்ளை பாடசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது என எமக்குத் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

கோவை இலக்கம் : OMB/P/2/5/4568 **பெயர் : திரு. எம். எம். ரோஹன**

கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல பிரதேச செயலக பிரிவின் இலக்கம் 29/1, மடுவேகெதர, நிட்டம்புவை என்னும் முகவரியில் வதியும் எம். எம். ரோஹன அவர்களால் 2022.02.08 ஆம் திகதி எமக்கு முறைப்பாடு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அதில், கல்வித் திணைக்களத்தில் சேவையாற்றும் அவர் மற்றும் நான்கு உத்தியோகத்தர்கள் தேசிய மாணவர் படையில் தீவிர சேவை கடமைகளுக்காக ஆசிரியர் கல்வி சேவையிலிருந்து விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்படுத்தித் தருமாறு, தேசிய மாணவர் படையின் பிரிகேடியர் படை செயலாளரினால் கல்வி அமைச்சின் செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், தேசிய மாணவர் படையின் தீவிர சேவை கடமைகளுக்கு ஏனைய நான்கு உத்தியோகத்தர்களும் இது வரையில் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், இது வரையில் அவரை விடுவிக்காமையினால் அவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

அவரால் தீவிர சேவை கடமைக்குத் தேவையான அனைத்து ஆவணங்களும் சரியான முறையில் கையளிக்கப்பட்டுள்ளது என்பதால், பிரிகேடியர் படை செயலாளரின் 2021.11.30 ஆம் திகதி இடப்பட்ட கடிதத்திற்கு அமைய 2021.12.20 ஆம் திகதி ஆசிரியர் கல்வி சேவையிலிருந்து இராணுவ சேவைக்கு விடுவிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், முறைப்பாடு எமக்கு கிடைக்கும் வரையிலும், அவரை அதற்காக விடுவித்திருக்கவில்லை என்பதாகும்.

அதற்கமைய இது தொடர்பாக 2022.03.07 ஆம் திகதி கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டிருந்தது. அதற்குரியதான 2022.04.29 ஆம் திகதியிடப்பட்டு அனுப்பப்பட்டிருந்த அறிக்கைக்கு அமைய மேலதிக செயலாளரினால் (கல்வி மற்றும் சேவைகள்) இது தொடர்பில் அரச சேவைகள் ஆணைக் குழுவிடம் அனுப்பப்பட்டிருந்த கடிதத்தின் மூலம் தேவையான அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக 2022.03.10 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என எமக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய 2021.12.20 ஆம் திகதி தொடக்கம் இரண்டு வருட காலத்திற்கு ஆசிரியர் கல்வி சேவையிலிருந்து, தேசிய மாணவர் படை அணியின் தீவிர சேவைக்குத் தற்காலிகமாக விடுவிக்கப்படுதலை தாமதப்படுத்தியதை, எமது நிறுவனத்தின் தலையீட்டின் அடிப்படையில் நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு முடியுமானதாக இருந்தது.

கோவை இலக்கம் : OMB/P/2/6/3408 **பெயர் : திரு. எம். ஜி. சரத்**

சுயாதீன தொலைக்காட்சி சேவையில் உதவிப் பொறியியலாளராக சேவையாற்றும் திரு. எம். ஜி. சரத் அவர்களினால் 2020.08.14 ஆம் திகதியிடப்பட்ட முறைப்பாடு ஒன்று இந்த அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அவரை 2018.09.27 ஆம் திகதி தொடக்கம் 2020.02.03 ஆம் திகதி வரையில் சுயாதீன தொலைக்காட்சி சேவையில் வழமையான பதவிக்கு மேலதிகமாக போக்குவரத்துப் பிரிவின் தலைவராகக் கடமை பொறுப்பில் நடவடிக்கை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ளார் என்பதாகும். எனினும், நாளாந்த கடமைக்கு மேலதிகமாகப் பதில் கடமைக்காக கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா 5,000.00 கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ள போதிலும், தமக்கு அந்த கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்குமாறு கோரி உரிய அதிகாரியிடம் விண்ணப்பித்த போதிலும், நியாயமாக செயற்படாததால், அந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கு தலையிடுமாறு எமது நிறுவனத்திடம் கோரப்பட்டிருந்தது.

அந்த முறைப்பாடு தொடர்பில் சுயாதீன தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளரிடமிருந்து பல தடவைகள் நீண்ட விசாரணையின் பின்னர் 2022.01.27 ஆம் திகதி இருதரப்பு பங்கேற்புடன் இடம்பெற்ற பரீட்சிப்பின் பின்னர், குறித்த உத்தியோகத்தர்களுக்கு பரிந்துரை வழங்கி தெரிவிக்கப்பட்டு இருந்ததாவது "போக்குவரத்து அலகில் தலைவராக மேற்கொள்ளப்பட்ட பதில் கடமைக்காக 2018.09.27 ஆம் திகதி தொடக்கம் 2020.02.03 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்காக அந்த கடமையில் ஈடுபட்டமைக்கு ஏனைய உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் ரூபா. 5,000.00 கொடுப்பனவு இந்த விண்ணப்பதாரிக்கும் பெற்றுக் கொடுக்கப்படும் என்பதாகும்.

பின்னர் பணிப்பாளர் சபையின் அனுமதியின் அடிப்படையில் 2018.09.27 ஆம் திகதி தொடக்கம் 2020.02.03ஆம் திகதி வரையில் போக்குவரத்து அலகிற்குப் பொறுப்பாக கடமைகளை மேற்கொண்டமைக்காக மாதத்திற்கு ரூபா. 5,000.00 வீதம் ரூபா. 81,166.60 பெறுமதியினைக் கொண்ட காசோலை ஒன்று முறைப்பாட்டாளரின் பெயரில் வழங்கப்பட்டிருந்தது. இதன் மூலம் சுமார் இரண்டு வருட காலம் முறைப்பாட்டாளருக்கு செலுத்தப்படாதிருந்த பதில் கடமை கொடுப்பனவு எமது நிறுவனத்தின் தலையீட்டின் காரணமாக அவருக்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

கோவை இலக்கம் : OMB/P/2/7/987 **பெயர் : திரு. டபிள்யு. எம். ஆர். ரணசிங்க**

முறைப்பாட்டாளரான திரு. டபிள்யு. எம். ஆர். ரணசிங்க அவர்கள் துணை ஆசிரியராக சேவையாற்றி, 60 வயது பூர்த்தி அடைந்ததும் 2020.05.02 ஆம் தகதி மமா/தெல்/ஹந்தகனவ மகா வித்தியாலயத்தில் இருந்து சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

முறைப்பாட்டாளர் 1996.05.27 ஆம் திகதி டபிள்யு. எம். மானெல் விக்ரமசிங்க என்பவரை சட்ட ரீதியாகத் திருமணம் செய்துள்ளார். முறைப்பாட்டாளர் மற்றும் மானெல் விக்ரமசிங்க ஆகியோருக்கு இடையிலான திருமணத்தை நிறைவு செய்யும் தீர்மானிக்கப்பட்ட தீர்ப்புக் கூற்று 2005.01.17 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அது 2020.06.18 ஆம் தேதி இறுதித் தீர்ப்புக் கூற்றாக வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் ஓய்வூதியத் திணைக்களத்தினால் முறைப்பாட்டாளர் விவாகரத்து பெற்றுள்ளது, இறுதி தீர்ப்பு கூற்று வழங்கப்பட்ட 2020.06.18 ஆம் திகதியிலேயே எனத் தெரிவித்து விதவைகள் மற்றும் தபுதாரர் ஓய்வூதிய பங்களிப்புத் தொகை செலுத்துவதை நிராகரித்துள்ளது. அவ்வாறு நிராகரிப்பு செய்தல் நியாயமற்றது எனக் குறிப்பிட்டு முறைப்பாடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளில் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்தை செலுத்தி அறிக்கையொன்று கோரப்பட்டிருந்தது. அதாவது, ஓய்வூதியத் திணைக்களத்திடமிருந்து முறைப்பாட்டாளருக்கு அனுப்பப்பட்டுள்ள 2021.03.08 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்திற்கு அமைய, இந்த விவாகரத்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது, 2020.06.18 ஆம் திகதியை அடிப்படையாகக் கொண்டே என்பதால் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ள போதிலும் விவாகரத்து தொடர்பில் தீர்மானிக்கப்பட்ட தீர்ப்புக் கூற்று உள்ளடக்கப்பட்டுள்ளது, 2005.01.17 ஆம் திகதியாகும். அது 2020.06.18 ஆம் திகதி இறுதி தீர்ப்பாக வெளியிடப்பட்டவுடன் விவாகரத்து செயல்படுத்தப்பட்டுள்ளதால், தீர்ப்பு கூற்று தீர்மானிக்கப்பட்ட திகதியில் இருந்து என தீர்மானித்தல் பிழையானதாக உள்ளது. இந்த சட்ட ரீதியான நிலைமை எம். எச். என். ராஜரத்தினம் எதிர் எ.ஃப். டி. விண்ணக்கோன் 1988 71 ந.நி.வா. 241 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதற்கான காரணிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட வழக்கில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சட்ட ரீதியான நிலைமைக்கு அமைய, தீர்ப்பு கூற்றைத் தீர்மானித்தல் முற்றாக செயல்பாட்டு நடைமுறை என்பது தெளிவாக தெரிகின்றது. இதன் மூலம் திருமணத்தை இரத்துச் செய்தலானது தீர்மானிக்கப்பட்ட தீர்ப்பு வழங்கப்பட்ட திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படும் என மேலதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலக்கம் D/04/2004 கொண்ட வழக்கில் 2005.01.17 ஆம் திகதியிடப்பட்ட செயல் குறிப்பிற்கு அமைய, விவாகரத்து வழக்கில் இறுதி தீர்ப்பு 2005.01.17 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட சட்டரீதியான நிலைமை ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தின் மூலம் அதில் தலையீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், சுமார் ஒன்றரை வருட காலமாக எதுவித தீர்வும் கிட்டாது காணப்பட்ட இந்த சிக்கல், சரியான முறையில் தீர்க்கப்பட்டது என்பது 2022.06.20 ஆம் திகதி இடப்பட்ட நன்றிக் கடிதத்தின் மூலம் முறைபாட்டாளரினால் இந்த அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

கோவை இலக்கம் : OMB/P/2/9/1079 **பெயர் : திரு. டீ. எம். எஸ். திஸாநாயக்க**

மணிக்ஹின்ன, நாபான, ஏதன்டேகும்புர, இலக்கம் 16/ஏ எனும் முகவரியில் வசிக்கும் திரு. டீ. எம். எஸ். திஸாநாயக்க அவர்களினால் 2021.07.17 ஆம் திகதியிடப்பட்டு இந்த அலுவலகத்திற்கு முறைப்பாடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, முறைப்பாட்டாளரின் வீட்டின் முன்புறம் புதிய பக்கக் கால்வாய் நிர்மாணிப்பதனால் அவரது வீட்டில் அமைக்கப்பட்டுள்ள அத்திவாரம் நீரில் மூழ்கியுள்ளது என்பதாகும். இந்த நிர்மாணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள, திட்டமுறை அபிவிருத்தி செயற்றிட்டத்தின் மூலமாகும். அதனால் இது தொடர்பாக அந்த செயல் திட்டத்திற்குப் பொறுப்பான பணிப்பாளரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள மதகுகளின் அமைவிடத்தில் மாற்றம் இடம்பெறாது என்பதாகும். ஆயினும் புதிய நிர்மாணிப்புகளின் மூலம் முறைபாட்டாளருக்கு துன்பம் ஏற்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளதால், இரு தரப்பினரும் இந்த அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு பரீட்சிப்பு நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்

போது குறித்த தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்டதன் பின்னர், குறித்த மதகினை இருக்கும் இடத்திலிருந்து அகற்றி முறைப்பாட்டாளருக்கு

தொந்தரவு ஏற்படாத இடத்தில் அமைப்பதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு அது தொடர்பில் இந்த அலுவலகத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் இந்த அலுவலகத்தின் தலையீட்டின் அடிப்படையில் திரு. டீ. எம். எஸ். திஸாநாயக்க அவர்களின் கோரிக்கைக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருந்தது.

கோவை இலக்கம் : OMB/P/2/9/1094 **பெயர் : திரு. ஜே. ஏ. உபாலி ரஞ்சித்**

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தில் பிரதிப் பொது முகாமையாளராக 2021.05.07 ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள இந்த முறைப்பாட்டாளருக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் வியாபார முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தினால் அது நிராகரிக்கப்பட்டு உள்ளது என்பதால், இந்த அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு அவருடைய வாகன அனுமதிப் பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்படாது உள்ளமைக்கு, 12 ஆண்டு கால உயிர்ப்பான சேவை காலம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்படாது இருந்தமையும், சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டு இருக்காமையும், அவர் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டமை போன்ற காரணிகள் காரணமாகும்.

இது தொடர்பில் வியாபார முதலீட்டு கொள்கைத் திணைக்களத்திடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர், முறைப்பாட்டாளர் குறித்த தகமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா என்பது தொடர்பில் மீண்டும் பரீட்சிப்பு செய்யப்பட்டதன் பின்னர், அவருக்கு வாகன அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக் கொடுப்பதற்கு உள்ள திறன் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர், இது தொடர்பில் பொதுசன ஊடக அமைச்சிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, 2022.03.31 ஆம் திகதி முறைப்பாட்டாளருக்கு உரிய வாகன அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என இந்த அலுவலகத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இந்த அலுவலகத்தின் தலையீட்டின் அடிப்படையில், சலுகை விலை வாகன அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்ததுடன், அதன் பிரகாரம் அவரது கோரிக்கை நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது.

கோவை இலக்கம் : OMB/P/2/10/1642 **பெயர் : திரு. ஆர். ஆர். சேனாரத்ன**

திரு. ஆர். ஆர். சேனாரத்ன அவர்களினால் அவரது மகள் 2018 ஆம் ஆண்டில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகள் பெற்று சித்தி அடைந்துள்ள போதிலும் 2019 ஆம் ஆண்டில் பின்னவல மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 06 இற்கு அனுமதிக்க முடியாது போய் உள்ளது எனத் தெரிவித்துள்ளார். அதனால் 2020 ஆம் ஆண்டில் அந்தப் பாடசாலையில் தரம் 07 இற்கு பிள்ளையை அனுமதிப்பதற்கு விண்ணப்பித்துள்ளார். எனினும் பிள்ளையை அனுமதித்தல் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆயினும் விண்ணப்பதாரியின் பிள்ளை பெற்றுக் கொண்டுள்ள புலமைப் பரிசில் புள்ளிகளுக்கு சமமான மற்றும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பல மாணவர்களுக்கு 2020 ஆம் ஆண்டில் தரம் 07 இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதற்கான தகவல்கள் முறைபாட்டாளரினால் அனுப்பப்பட்டிருந்தது.

அதற்கமைய, பல தடவைகள் இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கல்விப் பணிப்பாளரிடம் (தேசிய பாடசாலை) விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதன் போது மேலே கூறப்பட்ட வகையில் அனுமதி வழங்கப்பட்டிருந்த பல மாணவர்களுக்கு பின்னவல மத்திய மகா வித்தியாலயத்தில் அனுமதி வழங்கப்படும் அடிப்படை என்ன என்பது தொடர்பில் தெளிவாக தெரிவிப்பதற்கு அவர்கள் தவறி இருந்த காரணத்தால் 2020.03.04 ஆம் திகதியில் குறித்த தரப்பினர்களின் பங்கேற்றலுடன் பரீட்சிப்பினை நடாத்தி பிள்ளையை பாடசாலைக்கு அனுமதிக்குமாறு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் கல்வி அமைச்சின் செயலாளர் மேற்கூறிய விண்ணப்பதாரரின் பிள்ளை 2021 ஆம் ஆண்டு பின்னவல தேசிய பாடசாலையில் தரம் 08 இல் அனுமதிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளதுடன், தற்போது பிள்ளையின் அனுமதி மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அத்துடன் சிக்கல் தீர்க்கப்பட்டுள்ளது.

எமது அலுவலகத்தின் தலையீட்டின் மூலம் நிவாரணங்களை பெற்றுக்கொண்ட முறைப்பாட்டாளர்களின் பாராட்டுக் கடிதங்களின் பிரதிகள் இவ்வறிக்கையை நிறைவு செய்யும் நோக்கத்திற்காக அறிக்கையின் இறுதியில் இணைக்கப்படுகின்றன.

2. புள்ளிவிபரப் பகுப்பாய்வு

2.1. புள்ளிவிபரப் பகுப்பாய்வு


2022 ஆம் ஆண்டில் இவ்வலுவலகம் புலனாய்வுக்கும் அறிக்கைக்குமாகப் பாராளுமன்ற பொது மனுக்கள் குழுவினால் அனுப்பப்பெற்ற 9 முறைப்பாடுகளையும் மேலதிகமாக பொது மக்களிடமிருந்து நேரடியாக 1237 முறைப்பாடுகளையும் பெற்றுள்ளது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் மீதமாகவுள்ள 928 முறைப்பாடுகள் முடிவுபெறுவதற்குள்ளன. எனவே இவ்வருட மீளாய்வின் கீழ் கையாள வேண்டிய மொத்த முறைபாடுகள் 2174 ஆகும்.

	நிலுவை	முடிவுறுத்தப்பட்டது	மொத்தம்
2021 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மீதி			928
(1) 2022.01.01 இலிருந்து 2022.12.31 ஆம் திகதி வரை பெறப்பட்ட முறைப்பாடுகளின் மொத்தம்			
I. நேரடியாக முறைப்பாட்டாளரிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள்	127		
II. பாராளுமன்றத்தின் பொது மனுக்கள் குழுவினால் அனுப்பப்பட்டவை	9		
(2) 2022 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த தொகை			1246
2022 ஆம் ஆண்டில் புலனாய்வு செய்யவேண்டியிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை			214

2022 ஆம் ஆண்டில் புலனாய்வு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை			
1. ஆரம்ப நிலையில் முடிவுறுத்தப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை			
I ஒம்புட்சுமானின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டவை		659	
Ii விசேட நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத முறைப்பாடுகள்		5	(644)
2. ஏறபுடைய நிறுவனங்களிடமிருந்து கோரப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் விசாரணை செய்ய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை			
i. முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்ட விடயங்களை கருத்தில் கொண்டு அறிக்கைகள் கோரப்பட்ட முறைப்பாடுகள் - முடிவுறுத்தப்படவில்லை	276		
ii. பெறப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயத்தை கருத்தில் கொண்டு மேலும் அறிக்கை கோரப்பட்டு முறைப்பாடுகள் - முடிவுறுத்தப்படவில்லை.	338		
iii. முறைப்பாட்டாளர்களிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டுள்ள முறைப்பாடுகள் - முடிவுறுத்தப்படவில்லை.	70		
iv. அறிக்கைகள் பெறப்பட்ட பின்னர் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட முறைப்பாடுகள்		167	
v. அறிக்கைகள் கோரப்பட்ட பின்னர் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட முறைப்பாடுகள்		385	
vi. முறைப்பாட்டாளர்களின் அக்கறையின்மை காரணமாக முடிவுறுத்தப்பட்ட கோவைகள்		254	(806)
3. அறிக்கை கோரப்பட்டு தீர்மானமொன்றை எட்டமுடியாததால் இரு குழுக்களையும் அழைத்து விசாரணை நடத்தப்பட்ட முறைப்பாடுகள்			
i. பெற்றுக்கொண்ட அறிக்கைகளை ஆய்வு செய்து முறைப்பாட்டாளர்களையும் பிரதிவாதிகளையும் அழைத்து விசாரணை செய்யப்பட்ட முறைப்பாடுகள்- முடிவுறுத்தப்படவில்லை	15		
ii. விசாரணையின் பின்னர் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டவை		2	
